SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை – அரசு மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத் (டான்சிட்கோ) தொழிற்பேட்டைகளில் உள்ள அரசு புறம்போக்கு என வகைப்பாடு கொண்ட நிலங்களை நில உரிமை மாற்றம் மற்றும் இரயத்துவாரி என வகைபாடு மாற்றம் செய்து முடிவெடுத்திட அதிகாரமளிக்கப்பட்ட குழு (Empowered Committee) அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (சி) துறை**

அரசாணை (நிலை) எண்.72

நாள்: 30.11.2021
பிலவ வருடம், கார்த்திகை 14
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.148, திட்டம், மேம்பாடு மற்றும் சிறப்பு அமலாக்கு துறை, நாள் 20.11.2009.
2. அரசாணை(நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (குமா1(1) துறை, நாள் 15.06.2018.
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் அவர்களின் கடித எண்.11717/என்1/2013, நாள் 11.08.2021.

-----

**ஆணை:**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் குறித்த நேரத்தில் மெட்ரோ ரயில்வே திட்டத்தை நிறைவேற்றும் நோக்கில் நிலம் கையகப்படுத்துதல், நில எடுப்பு, பயன்பாட்டுகளின் திசை திருப்புதல், திட்டத்தால் பாதிக்கப்பட்டவரின் மறு வாழ்வு, உள்துறை மற்றும் உள்நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்களிடமிருந்து அனுமதி ஆகியவை குறித்து தீர்வு காணும் நோக்கில், திட்டம், மேம்பாடு மற்றும் சிறப்பு அமலாக்கு துறை, உயர்மட்ட குழு (High Power Committee) அமைத்து ஆணை வெளியிட்டுள்ளது.

2. அதுபோல, மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு ஆட்சேபனையுள்ள மற்றும் ஆட்சேபனையற்ற அரசு / புறம்போக்கு நிலங்களை நிலவுரிமை மாற்றம் செய்வது குறித்து முடிவெடுத்திட செயலாக்க குழு அமைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. இதே குழுவினர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நிலவுரிமை மாற்றம் செய்வதிலும் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் அவர்கள் டான்சிட்கோ நிறுவனத்தின் பராமரிப்பில் 41 அரசு தொழிற்பேட்டைகளும், 81 தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத் தொழிற்பேட்டைகளும் உள்ளன என்றும், மேற்படி தொழிற்பேட்டைகளில் மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் (Shed) விற்பனைப் பத்திரங்கள் மூலமாக தொழில்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன என்றும், அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட நிலங்களுக்கு வங்கிகள் மூலமாக கடன் பெறுவதற்கு பட்டா அவசியமாகிறது என்றும், மொத்தமுள்ள 122 தொழிற்பேட்டைகளில் 62 தொழிற்பேட்டைகளுக்கு பட்டா பெறப்பட்டுள்ளது என்றும், 4 தொழிற்பேட்டைகளுக்கு நில உரிமை மாற்றம் செய்து அரசாணைகள் பெறப்பட்டு, வகைபாடு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் 2 தொழிற்பேட்டைகளுக்கு நில உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், மீதமுள்ள 54 தொழிற்பேட்டைகளில் உள்ள 4798 ஏக்கர் நிலங்களில் 3215 ஏக்கர் அரசு புறம்போக்கு என்ற வகைபாட்டில் உள்ளதால், பட்டா பெற இயலாத நிலை உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ள மேற்கூறப்பட்ட 54 தொழிற்பேட்டைகளில் 29 அரசு தொழிற்பேட்டைகள் ஆகும். இவை, தொழில் வணிகத் துறையின் மூலம் உருவாக்கப்பட்டு பின்னர் தமிழ்நாடு சிட்கோவிற்கு ஒப்படைக்கப்பட்டவை ஆகும். இந்நிலத்தில், மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டு விற்பனை பத்திரம் மூலமாக அனைத்தும் தொழில்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நில மதிப்பு மற்றும் இதர இனங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தும் சேர்த்து அரசுக்கு அவ்வப்போது செலுத்தப்பட்டு வருகிறது. எனவே, அரசு புறம்போக்கு என்ற வகைப்பாட்டினை, மேற்படி 29 அரசு தொழிற்பேட்டைகளின் நிலங்களாக (நில உரிமை மாற்றம்) கொணர்ந்து, இரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்வதன் மூலம் தொழில்முனைவோருக்கு பட்டா பெற ஏதுவாக அமையும் என தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

5. மேலும், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 21 தொழிற்பேட்டைகளுக்கு நிலவுரிமை மாற்றம் மூலம் பெறப்பட்ட நிலங்களுக்கு நிலவுரிமை மாற்றம் செய்து அரசாணை வெளியிடப்பட்டு, நில மதிப்பு அரசுக்கு செலுத்தப்பட்டுவிட்ட நிலையிலும், அந்நிலத்தின் வகைபாடு அரசு புறம்போக்கு என்றே தொடர்ந்து வருவாய் ஆவணங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனால் இத்தொழிற்பேட்டைகளில் தொழில்முனைவோர் பட்டா பெற இயலாமல் உள்ளதால், மேற்படி நிலங்களை, தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டை நிலங்களாக கொணர்ந்து இரயத்துவாரி மனை என வகைப்பாடு மாற்றம் செய்வதன் மூலம் தொழில்முனைவோர் பட்டா பெற ஏதுவாக அமையும் எனவும், வனத்துறை, தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பாரத மிகு மின் நிறுவனம் (BHEL), டால்கோ (TALCO) போன்ற நிறுவனங்களிடமிருந்து நில மாற்றம் / நில எடுப்பு மூலம் சிட்கோ நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, விற்பனை பத்திரம் / நில மதிப்பு செலுத்தப்பட்டு சிட்கோ நிறுவனத்தால் கிரயம் செய்யப்பட்ட 4 தொழிற்பேட்டைகளின் நிலங்களின் வகைப்பாடும் அரசு புறம்போக்கு

என்று வருவாய் கணக்கில் உள்ளது என்றும் இந்நிலங்களும் மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் / தொழிற்கூடங்களாக விற்பனை பத்திரங்கள் வாயிலாக தொழில்முனைவோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றும் இந்நிலங்களின் வகைப்பாடும் இரயத்துவாரி மனையாக மாற்றம் செய்ய வேண்டியுள்ளதாக தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

6. மேலே பார்வை 1 மற்றும் 2ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்டுள்ள செயலாக்கக் குழுவினைப் போல, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 54 தொழிற்பேட்டைகளில், 29 அரசு தொழிற்பேட்டைகளில் அடங்கிய அரசு புறம்போக்கு என்ற வகைப்பாட்டிலுள்ள நிலங்களுக்கு நில உரிமை மாற்ற அரசாணை பெற்று இரயத்துவாரி மனை என வகைப்பாடு செய்திடவும், 21 டான்சிட்கோ தொழிற்பேட்டைகள் மற்றும் வனத்துறை, பிற நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 4 தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களுக்கு அரசு புறம்போக்கு என்ற வகைப்பாட்டிலிருந்து இரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்திடவும், அது குறித்து முடிவெடுத்திட அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட குழு (Empowered Committee) ஒன்றினை அமைத்திட மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் அவர்கள் கோரியுள்ளார், மேலும் குழுவின் மூலம் தொழில்முனைவோரின் நீண்டகால கோரிக்கையான ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களுக்கு பட்டா வழங்கிட அரசு வருவாய்த் துறை மூலம் தக்க உத்தரவுகளை பெற்றுத் தருமாறும் கோரியுள்ளார்.

7. மேலே பத்தி 6ல் கண்டுள்ள தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவின் மீது குறிப்புரை வேண்டி, கோப்பு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைக்கு அனுப்பப்பட்டபோது, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஆகியவற்றிற்கு தொழிற்சாலைகள் அமைத்திட அரசு நிலங்களை ஒதுக்கீடு செய்வதால், அந்நிலங்கள் தொடர்பாக ஆய்வு செய்ய ஏதுவாக மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஆகியோரையும் உறுப்பினர்களாக இக்குழுவில் சேர்க்கலாம் என கருத்து தெரிவித்துள்ளது.

8. மேற்கண்ட கருத்திற்கிணங்க அரசு மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத் (டான்சிட்கோ) தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களுக்கு உரிய நில உரிமை மாற்ற அரசாணை பெற்றிடவும், அரசு புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்ட தொழிற்பேட்டை நிலங்களை, இரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்யவும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) தொடர்பான நிலப்பிரச்சனைகளை ஆய்வுசெய்வதற்காகவும், **அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில்** கீழ்க்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய அதிகாரம் பெற்றக் குழுவை (Empowered Committee) அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது. மேலும் தொழில்முனைவோருக்கு பட்டா வழங்கிட வருவாய்

மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் தக்க உத்தரவுகளை பெற்றுத் தரவும் இக்குழு செயல்படும்.

| | | |
|---|---|---|
| 1. | அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 2. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொழில் துறை | உறுப்பினர் |
| 3. | அரசு முதன்மைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை | உறுப்பினர் |
| 4. | அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | உறுப்பினர் |
| 5. | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் | உறுப்பினர் |
| 6. | நில நிருவாக ஆணையர், | உறுப்பினர் |
| 7. | மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) | உறுப்பினர் |
| 8. | மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) | உறுப்பினர் – செயலர் |
| 9. | மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) | உறுப்பினர் |

9. இவ்வரசாணை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அ.ந.எண் 35055/எல்டி5(1)/2021-1, நாள். 14.10.2021 அன்று இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி. அருண் ராய்
அரசு செயலாளர்

**பெறுநர்**

அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை, சென்னை – 9.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
தொழில் துறை, சென்னை – 9,

அரசு முதன்மைச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை,
சென்னை –9,

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை –32,

கூடுதல் தலைமைச் செயலாளர் /நில நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை –5.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்,
சென்னை –8,

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 32.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,
சென்னை –8,

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலகம் சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர், (குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச்செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு செயலாளரின் நேர்முக உதவியாளர்,
குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை–9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை–9.
உதிரி கோப்பு / இருப்பு கோப்பு.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

30/11/2021

**பிரிவு அலுவலர்**